**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.**
**அ.வ.எண். 29/2012**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6ம் நாள் புகன்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1. சுந்தர குமார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது பெயரில் கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது 25.02.2004 என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தின் தரைதளத்தில் மோகன் குமாரும் முதல் தளத்தில் நானும் விஜயகுமாரும் வசித்தோம் என்றால் சரிதான். கிரையபத்திரம் பதிவு செய்த பிறகும் அவ்வாறே வசித்து வந்தோம். 2006ம் ஆண்டு முதல் தளத்தில் இருந்து தரை தளத்திற்கு மாற்றி குடியேற எனது தந்தையிடம் கேட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு கேட்ட பிறகு மோகன் குமார் தரை தளத்தில் இருந்து முதல் தளத்திற்கு மாறிவிட்டார். நான் தரை தளத்தில் இருந்தேன். 2006 லிருந்து நான் தரை தளத்தில்தான் வசிக்கிறேன். 2004 லிருந்து எனது பெயரில்தான் மின் இணைப்பு உள்ளது. குடிநீர் வரியும் நான்தான் செலுத்துகிறேன். 2004 க்கு பிறகு ஜானகிராமன் பெயரில்தான் மின் இணைப்பு இருந்தது என்றால் சரியல்ல. 2006ம் வருடம்தான் மின் இணைப்பையும் சொத்து வரியையும் எனது பெயருக்கு மாற்றினேன் என்றால் சரியல்ல. 2006ல் மாற்றியதற்கு நானே ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றும் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அதிகம் மின் சாதணங்கள் வைத்திருந்ததால் 3 ஸ்பேஸ் இணைப்பு தேவைப்பட்டது என்றால் சரிதான். நான் அதை வாங்கிவிட்டேன்.

2. முதல் தளத்தின் மின் இணைப்பு ஜானகிராமன் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நான் பணிப்புரியும் இடத்தில் பெற்ற கடனுக்கு மாதம் மாதம் எனது சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மூன்றாம் வாதியும் 4ம் வாதியும் ஒவ்வொரு மாதமும் என்னிடம் ரூ.800/– செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. எனது சகோதரர்கள் என்பதால் அவர்கள் அந்த பணத்திற்கு என்னிடம் ரசீது வாங்கவில்லை என்றால் சரியல்ல. 2010ம் வருடம் எனது மனைவியின் சகோதரர்கள் பொன்னேரி தாலுக்காவில் இடம் வாங்கினார்கள்

என்றால் சரிதான். அவர்கள் தேவைக்காக வாங்கினார்கள். அதன் பிறகு அடிக்கடி எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் கொடுத்த தகவலின் பெயரில் 3,4 வாதிகளுக்கு இடையுறு செய்தேன் என்றல் சரியல்ல.

3. தரைதளத்தில் இருந்த தண்ணீர் குழாயை நான் மூடாததால் 3,4 வாதிகளின் வீடு இருந்த முதல் தள வீட்டிறகு தண்ணீர் போகவில்லை என்றால் சரியல்ல. இதைப்பற்றி கேட்டதற்கும் நான் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் எனது அனுமதி இல்லாமல் தனியாக தண்ணீர் குழாய் பதித்து கொண்டார்கள். 2010ம் ஆண்டு அது குறித்து நான் 3,4 வாதிகளுக்கு எதிராக பொனனேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 3,4 வாதிகளை மிரட்டியதுடன் இடையுறு செய்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் சரியல்ல. பேச்சு வாரத்தைக்கு மோகன் மற்றும் பிரபு சங்கர் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் மோகன் சாட்சி கையெழுத்து போட்டார் பிரபு சங்கர் யார் என்று எனக்கு தெரியாது. இது குறித்து பிராது 49ல் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த பேச்சு வார்த்தை ஒப்பந்தத்தை கிழித்து போட்டுவிட்டார்கள். எனது கையெழுத்தை மிரட்டி வாங்கினார்கள்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.